THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

(கொலோசெயர் 3:16)


…கஸ்ட்
2005

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 5 கனி 9

**19வது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**

கர்த்தருடைய
வேதத்தின்படி
நடக்கிற
உத்தம
மார்க்கத்தார்
பாக்கியவான்கள்
*சங்.119:1*



**தமிழகத்தை சுவிசேஷத்தினால் நிறப்புவோம்**

*கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் ரோம.10:13*

வாலிபனே முழங்கிடு!
நான் ஒரு கிறிஸ்தவன் என்று.
வாலிபனே முழங்கிடு!
இயேசுவே கிறிஸ்து என்று.
வாலிபனே முழங்கிடு!
பொல்லாங்கனை ஜெயித்தேன் என்று.
வாலிபனே முழங்கிடு!
நான் கிறிஸ்துவுக்கு நல்ல போர்சேவகன் என்று.
வாலிபனே முழங்கிடு!
ஒரே சரீரம் அது கிறிஸ்துவின் சபையார் என்று.

**P.டேவிட்**

*கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்*
*(ரோமர்16:16)*

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 ஆகஸ்டு - 2005 கனி - 9


ஆசிரியருரை

## அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே

*Add thou not unto His words*




தேவன் பரிசுத்த வேதாகமத்தை தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாக நமக்கு அருளிச்செய்திருக்கிறார். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ.3:16,17). தேவனுடைய மனுஷன் தேறினவனாக இருக்க தேவனுடைய வசனம் அவனுக்கு மிக முக்கியம். அவ்வசனத்தை அவன் பாதுகாக்கவும் அவைகளின்படி செய்யவும் மிக கவனமாக இருக்கவேண்டும். அவைகளில் ஒன்றை கூட்டுவதோ அல்லது குறைப்பதோ கூடாது. ஆனால் தங்களுடைய வாழ்க்கையில் எல்லாவற்றையும் கூட்டிப் பழகினவர்கள் இதையும் கூட்டிவிடுகிறார்கள். அது அவர்களுடைய பழக்கதோஷமாக இருக்கிறது. அப்படிக் கூட்டினால் என்ன நடக்கும் என்பதை இச் செய்தியின் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

முதலாவது வேத வசனங்களை கூட்டுமுன் யோசிக்க வேண்டியவை நாம் அதற்கு உரிமையாளர்களா? நம்மால் அது எழுதப்பட்டதா? என்ற கேள்விகள் எழும்பவேண்டும்.

“தேவனுடைய செயலைச் கவனித்துப்பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத்தக்கவன் யார்?” (பிர.7:13). நாமே தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கும்போது உண்டாக்கினவருடைய செயல்பாடுகளில் திருத்தம் செய்வதோ குறைப்பதோ அல்லது கூட்டிவழங்குவதோ நம்முடைய காரியமல்ல. “தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்” (நீதி.30:5). அதில் பழுது ஒன்றுமில்லை. வசனம் ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கக்கூடியதாயிருக்கிறது. தேவன் சத்தியபரர் அவருடைய வசனங்களும் சத்தியமானவைகள். பொன்னை புடமிடுவதுபோல தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். நாம் அவைகளைப் புடமிடவோ அல்லது சோதித்துப்பார்க்கவோ இயலாது. ஏனென்றால் நாம் மண்ணானவர்கள். கர்த்தர் சொல்லுகிறார்: ‘வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்” (லூக்.16:17) என்கிறார். அப்படியானால் வேதத்தில் உள்ள ஒரு எழுத்தின் உறுப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். 'இவ்வுலகத்தில் உள்ள ஆட்சியில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு அந்த ஆட்சியின் கீழ் உள்ளவர்கள் எப்படிக்கீழ்ப்படிகிறார்கள்! உலக ஆட்சிக்கு அவர்கள் அப்படிக் கீழ்ப்படியும்போது, ஆவிக்குரிய கட்டளைகளைப் பிதாவிடம் பெற்ற நாம் எவ்வளவு அதிகமாக அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதை திருத்தம் செய்யவோ மாற்றியமைக்கவோ நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. வசனங்களை அப்படியே கைக்கொள்ளவேண்டியது நம்மேல் விழுந்த கடமை.

தாவீது சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே தேவனுக்குப் பயந்து ஜீவித்தான். அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்த வனாகவும் வாழ்ந்தான். “தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்” (நீதி.30:5) என்ற வசனத்தின்படி அவரை அண்டிக்கொண்டவனாக இருந்தான். ஒரு முறை கோலியாத் தாவீதை நிந்தித்தபோது “பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்” (1சாமு.17:45) என்று சொல்லி அவனை ஜெயித்தான். அவன் தேவனோடிந்தான். அவரை அண்டிக்கொண்டிருந்தான். அவர் அவனுக்குக் கேடகமாயிருந்து கோலியாத்தை ஜெயிக்க உதவியாயிருந்தார்.

இன்று உங்களுடைய பெலத்தோடு போவீர்களானால் வெற்றிபெறமுடியாது. முதலாவது அவரை அண்டிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஞானத்தையும் பெலத்தையும் தூக்கிஎறிந்துவிட்டு தேவனுடைய ஞானத்தையும் பெலத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

பவுலுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் வந்த கஷ்டங்கள் கொஞ்சமா! நஞ்சமா! எல்லா உபத்திரவங் களிலிருந்தும் அவர்களுக்கு கர்த்தர் கேடகமாயிருந்து காத்தார். "ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக் கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2கொரி.1:8-10). இவர்களுடைய நம்பிக்கையை மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் வைத்தார்கள். இன்று உங்களுடைய நம்பிக்கையை யார்மீது வைத்துள்ளீர்கள்? திருவசனத்தை கூட்டுகிறவர்கள் மீதா? அப்போஸ்தலர்கள் எல்லாரும் தங்களையே பிரசங்கியாமல், மனிதனுடைய பாவத்திற்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார்கள். குறிப்பாக வசனத்தை கூட்டாது பிரசங்கித்தார்கள். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்......" (1கொரி.11:23) என்கிறான். இவ்வசனத்தில் பவுல் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டதை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கிறான். ஆக சுயகருத்துக்களை அப்போஸ்தலர்கள் முதல் நூற்றாண்டு சபைக்கு கொடுக்க முன்வரவில்லை. நாமும் அதைப்போல வேதவசனங்களைக் கூட்டாது எவ்விதமானபாடுகளும், சோதனைகளும் வந்தாலும் மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருப்போம்.

எனக்கொரு ஊழியரை ஞாபகத்திற்கு வருகிறது. அவர் தன்னுடைய பிரசங்கத்தில் வெளி.25:10 என்ன சொல்லுகிற தென்றால் 'கர்த்தர் வரும்போது உலகத்தில் உள்ள அனைவரும்

இரட்சிக்கப்படுவார்கள்' என்றார். உடனே ஆகா இப்படியொரு வசனம் இருக்கிறதா! என்று சொல்லி அனேகர் வேதாகமத்தை புரட்டிப்பார்ப்பார்கள். பின்பு தான் தெரியும் அப்படியொரு வசனம் இல்லையென்று. வேதம் சொல்லுகிறது: "அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே" (நீதி.30:6). கர்த்தர் சொன்னால் சொன்னதுதான் என்ற முடிவுக்கு வரவேண்டும். அதற்குமேல் வியாக்கியானம் தேடுவதோ அல்லது மிகைப்படுத்தி சொல்வதோ குற்றமாகும். கூட்டாதே என்றால் வேதாகமத்தோடு ஒரு புத்தகத்தைத் தான் சேர்க்கக்கூடாது என்ற கருத்து அநேகரிடத்தில் இருக்கிறது. உண்மைதான், அத்தோடு ஆராதனையிலும், கிறிஸ்தவ ஜீவியத்திலும் தேவன் சொல்லாத காரியத்தை கூட்டக்கூடாது. அப்படிக் கூட்டுவது அவருடைய வசனங்களோடு ஒன்றைக் கூட்டுவதற்கு சமம்.

உதாரணமாக நாதாபும் அபுயூவும் அந்நிய அக்கினையை எடுத்து தேவ சமூகத்தில் தூபம் காட்டி மரித்தார்கள். ஆசாரியன் அதாவது ஒரு தேவ மனிதன் "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை; (ஏசா.8:20). ஆனபடியால் வேதாகமத்தை உற்று நோக்குவது எவ்வளவு அவசியமா யிருக்கிறது. நம்முடைய பிதாக்களோ அவைகளை உதாசினம் செய்து இருக்கிறார்கள். ஆதாம் முதல் இன்றுவரையும் இனிமேலும் கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது அவருடைய வசனங்களுக்கு கீழ்ப்டிந்து அத்துடன் எதையும் கூட்டாது இருக்கவேண்டும் என்பதே. ஆனால் இஸ்ரவேலோ அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள் என்கிறார். "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்" (ஓசி.8:12). ஆம் கர்த்தர் நம்மை நேசிக்கிறபடியால் வேதாகமத்தை கொடுத்திருக்கிறார். அதில் அறிய பெரிய பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது. அதை உருக்குளையாமல் பாது காப்பதும் அவைகளோடே ஒன்றையும் கூட்டாமல் இருப்பதும் நமது கடமையாகும். நம்முடைய மூதாதையர் விட்டுச்சென்ற பத்திரங்களையும் உடமைகளையும் எவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கின்றோம். அதைப் பார்க்கிலும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய வேதாகமத்தைப் பாது காப்பது அவசியமல்லவா?

"கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்கு

கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" (2பேது.3:16). இன்றைக்கு அனேக இடங்களில் வேதபுரட்டர்களைப் பார்க்கமுடிகிறது. இவர்களுக்கான தண்டனையை அறியாதிருக்கிறார்கள். "கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்" (நீதி.30:6). இங்கே நினைவு கூறவேண்டிய ஒரு சம்பவம் இருக்கிறது. என்னவென்றால் கர்த்தர் சபித்த அத்திமரம் வேரோடு பட்டுப்போயிற்று. அவர் உன்னை கடிந்து கொள்வாரானால் நீ என்னாவாய் சற்று யோசித்துப் பார். உமது பிரமாணங் களைவிட்டு வழி விலகுகிற யாவரையும் மிதித்துப்போடுகிறீர்; அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே" (சங்.119:118). மேலும் "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார்" (வெளி.22:18).

வேத வசனத்தோடு ஒன்றைக் கூட்டினால் கடிந்து கொள்வதோடு வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட வாதைகளையும் தேவன் கூட்டுவார். நீயும் பொய்யனாவாய். பொய்யனானபிறகு முடிவு நித்திய மரணமே. "பயப்படுகிற வர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி.21:8). வேதவசனங்களை கூட்டி பொய்யனாகி நித்திய அக்கினி கடலிலே பங்கடையப் போகிறீர்களா? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். வேதாகமத்தோடு கூட்டி பேசுவதை நிறுத்திவிட்டு சொல்லப் பட்டு இருக்கிற வசனத்தை குறைக்காமல் கைக்கொண்டு நடக்க முயற்சியுங்கள். "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச்செய்து வருகிறார்" (பிர.3:14). ஆகையால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் நிலைத்திருந்து அவருடைய ஆசீர்வாதத்தையும் அரவணைப் பையும் பெற்றுக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

# வழிநடத்துனர்கள் தேவை
# Leaders Needed

*J.C.Choate*



சபையில் இன்று நம்முடைய மிகப்பெரிய தேவை சபையை வழி நடத்துனர்கள் தான். சத்தியத்திற்காக உறுதியாக நிற்கிறவர்களும், வேதாகமம் போதிக்கிறவற்றை அறிந்து, உண்மையாக மனந்திரும்பிய மனிதர் நமக்குத் தேவை. உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வேதாகமத்தைக் குறித்துப் பிரசங்கிக்கிற ஆர்வமுடைய உலகதரிசனம் கொண்ட மனிதர் நமக்குத் தேவை. பிரசங்கம் செய்து, அதன்படி கிரியை நடப்பிக்கும், மேலும் சகோதரசிநேகம் கொண்டுள்ள மனிதர் நமக்குத் தேவை. உறுதியான விசுவாசமும், மனிதருடைய ஆத்துமாக்களை நேசிக்கிறதும், கர்த்தருக்காகவும் அவருடைய வேலைக்காகவும் நேரம் ஒதுக்குகின்ற மனிதர் நமக்குத் தேவை. இப்பேர்பட்ட போதிய மனிதர்களால், சபை வளர்ந்து, உலகமுழுவதும் சுவிசேஷம் பரம்பும். இவர்களல்லாமல், நாம் ஸ்தம்பித்துவிடுவோம்.

ஸ்திரீகள் வித்தியாசமான பங்கினைப் பெற்றுள்ளனர், அவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதியில் சுவிசேஷப்பணியை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் பகிரங்கமாகக் குழந்தைகளுக்கும், பாலிய ஸ்திரீகளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் போதிக்கலாம். அவர்கள் நல்ல மனைவிகளாகவும், தாய்மார்களாகவும், சபையில் புருஷர்களுக்கு உதவியாகவுமிருக்கலாம். அவர்கள் உபசரிக்கிறதன் மூலமும் பிரயாசப்பட்டு போதிப்பதன் மூலமும் உறவினர்களையும், அண்டைவீட்டார்களையும், நண்பர்களையும் ஆதாயப்படுத்தலாம். இப்பேர்பட்ட ஸ்திரீகளுடைய ஈடுபாடில்லாமல் சபை அதிகமாக ஒன்றும் செய்யப்போகிறதுமில்லை, மிக அதிமாக வளர்ச்சியடையப் போகிறதுமில்லை.

தேவன் நியமித்தபடி புருஷர் ஸ்திரீகள் இருவரும் செய்யும்படிக்கு தங்களுடைய சொந்த வேலையை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும் என்பதே இன்றைய உலகத்தின் சவாலாயிருக்கிறது. ஒருவர் இன்னொருவருடைய பணியை செய்ய முயலும்போது, பிரச்சனைகள் நேரிடுகிறது. இதனால்தான் தேவன் தனித்தனியாக வேறுபட்ட தலைமைத்துவ பங்கினைக் கொடுத்தார். ஒவ்வொருவரும் மற்றொருவரை மதித்து தேவன் அவர்களுக்கென்று கொடுத்த பணியினை அவர்கள் செய்கிறபோது, அங்கே இன்னமும் வளர்ச்சி ஏற்படுகிறது. இல்லையென்றால் அங்கே போட்டியும் தோல்வியும் ஏற்படுகிறது.

சபை இன்று வழிநடத்துனர்களின் பெரிய தேவையிலிருக்கிறது. மூப்பர்கள், உதவிக்காரரர்கள், பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் போன்ற வழிநடத்துனர்கள் இல்லாமல் சபை வளர்ச்சியடையாது சமயம் கிடைக்காதவர் அல்லது வழிநடத்துவதற்கு சமயத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவர் என மிக அதிகமானோரை நாம் கொண்டிருக்கிறோம். நாம் கர்த்தருடைய வார்த்தையை அறியாதவர்கள் மற்றும் சபையின் ஊழியத்தை அறியாதவர்கள் என மிக அதிகமானோரை கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, உண்மையான வழிநடத்துகிறவர்களின் ஊழியம் கூடுமிடத்தைக் கொடுப்பதிலும் திறந்த வாசல்களை ஏற்படுத்துவதிலும் அதிகமாயிருக்கிறது. சபையை வழிநடத்துகிறவர்கள் அடிக்கடி செய்வது போல, விளையாட்டு பந்தயம், வியாபாரம், அரசியல் போன்றவற்றில் பொறுப்பாளிகளாயிருப்பவர்கள் தங்களுடைய பணியை செய்வார்களானால், அவர்கள் முழுவதும் தோற்றுப்போவார்கள். திட்டமிடாத இலக்குகளை நிர்ணயிக்காத, அர்த்தமில்லாத வேலைகள் இருக்கின்ற இடத்தில், செய்து நிறைவேற்றமுடியும்?

நம்முடைய தோல்விகளுக்கு நாம் மன்னிப்புக்குமேல் மன்னிப்பு அளிக்கின்ற இடத்தையே நாம் வந்தடைந்திருக்கிறோம். நாம் ஜனங்கள் ஆர்வமில்லாதவர்கள் என்றும் மதஉலகம் கவனிக்காது என்றும், ரேடியோ பிரசங்கத்தினால் பணமும், நேரமும் வீணாகிறது என்றும், ஜனங்கள் வாசிக்கமாட்டார்கள் என்றும், ஆனபடியால் நாங்கள்

வெறுமனே உட்கார்ந்து மரிக்க தயாராக இருக்கிறோம் என்றும் நாமாகவே சொல்லிக்கொள்கிறோம். இது வழிநடத்துதாலா? இது வழிநடத்துதலாகாது. கர்த்தருடைய ஜனங்கள்தாமே இவ்வாறு நடந்து கொள்வது சரியான வழியல்ல.

உண்மையாக வழிநடத்துகிறவ ஒருவன் தன் ஊழியத்தை விட்டுவிட்டு வெளியேற மாட்டான். ஊழியத்தின் ஒரு நல்ல கனியைத்தராவிட்டால், அவன் இன்னொரு வழியில் முயலுவான். அவன் தேடுவதிலும், ஜெபிப்பதிலும், ஊழியஞ்செய்வதிலும் ஊழியம் நிறைவேற்றப்படும்படி இன்னொன்றை கண்டு கொள்ளும்வரை தொடர்ந்து செயல்படுவான். அவன், "மனுஷரால் இது கூடாததுதான்,தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்...." (மாற்.10:27) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூருவான்.

கவனியுங்கள்! உலகம் பாவத்தில் கிடக்கிறது. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கமாகிய - சுகமாக்கும் மருந்தினை கொண்டிருக்கிறோம். இந்த மருந்து போதுமான ஜனங்களை சென்றடைந்து பாவிகளின் பெரிதான தேவை அறிவுறுத்தப்பட்டு, சரியான வழியில் கொடுக்கப்பட்டால், அங்கே பதில் கிடைக்கும். இல்லை, நாம் சத்தியத்தை விட்டுக் கொடுக்கவோ, தவறை போதிக்கவோ, கிருபையை மட்டும் பிரசங்கிக்கவோ அல்லது சுவிசேஷத்தை சர்க்கரை தடவிக்கொடுப்பதற்கு ஓராயிரம் காரியங்களைச் செய்யவோ வேண்டியதில்லை. நாம் கர்த்தருடைய நாமத்தை மறுதலிக்கவோ, பிரிவினை சபைகளில் இணையவோ அல்லது சமூக சபைகளை ஸ்தாபிக்கவோ வேண்டியதில்லை. சத்தியத்தை தனிப்பட்ட நம்பிக்கையோடு பிரசங்கித்து நாம் போதிக்கிறவர்களை நேசிப்பதே நாம் செய்யவேண்டியவைகள் ஆகும்.

இயேசு நாம் உலகமுழுவதும் சென்று சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென சொன்னார் (மாற்.16:15,16). அவர் அதைச் சொன்னாரா அல்லது இல்லையா? அவர் அதைச் சொன்னாரென்றால் அவர் சொன்னபடி நாம் செய்யவேண்டியவற்றை கட்டாயமாக செய்து கொண்டிருக்கிறோமா? நாம் செய்யாவிட்டால், நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருக்கிறோமா? நாம் அவருக்குக்

கீழ்ப்படியவில்லையென்றால், நாம் ஆவிக்குரிய வழிநடத்துபவர்கள் என்று நம்மால் எவ்வாறு சொல்ல முடியும்?

வழிநடத்துனர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் வழிநடத்துவார்கள், சுவிசேஷப்பணியின் முழு இலக்கின் மேல் தங்கள் கண்களைப் பதித்தவர்களாயிருப்பார்கள், அப்போது தான் சபை கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றமுடியும். இதைச் செய்கின்ற போதுமான வழிநடத்துனர்கள் இருக்கையில், உலகம் வேதாகம அறிவைப் பெற்றிருக்கும். நாம் ஒப்படைக்கப்படாவிட்டால், கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நம்மை அவர் தகுதிப்படுத்தமாட்டார் ஏதோ சிலவற்றைச் செய்யும்படி நம்மைக் கேட்கிறவருமல்ல.

வழிநடத்துனர்களாயிருப்பதற்கு, நாம் ஏராளமான பணம் வைத்திருக்கவோ, நாம் பெரிய பிராந்திய சபைகளைக் கொண்டிருக்கவோ அல்லது கல்வியில் உயர்ந்த பட்டங்களைப் பெற்றிருக்கவோ தேவையில்லை. நம்முடைய தேவையெல்லாம் கர்த்தர், சத்தியம், விசுவாசம், அன்பு, ஆர்வம், தரிசனம், ஞானம், மற்றும் இலக்கிற்கான முழு ஒப்புக்கொடுத்தல் போன்றவைகளே ஆகும்.

கர்த்தர் செய்யும்படிக்கு நம்மை கேட்டுக் கொண்டிருக்கிற ஊழியத்தை நாம் செய்ய அவர் எல்லாவித ஏதுக்களையும் நமக்குத் தந்தருளியிருக்கிறார். நாம் பிராந்திய சபைகள் ரேடியோ, டி,வி மற்றும் இலக்கியம் போன்ற வசதிவாய்ப்புகளைக் கொண்டிருக்கிறோம். தேவசெய்தியை வெளிக்கொணருவதற்கு ஏதுவான இன்டர்நெட், ஒலிநாடாக்கள், வீடியோக்கள், **DVD** க்கள் மேலும் அளவில்லா மற்ற ஊடகங்கள் அனைத்தும் நமக்கு உதவியாக இருக்கின்றன. நாம் சுவிசேஷக் கூட்டங்களை ஒன்று அல்லது 3 நாட்களுக்கும் மேலாக நீண்ட நேரமும் அதிக பயனளிக்கும் வகையில் வீட்டிலும், பெரிய நகரங்களில் முகாம்களையும், மருத்துவனைகளிலும் மருத்துவ கிளினிக்குகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் வாகன ஓட்டுனருக்குகென்று அமைக்கப்பட்ட சாலை ஓரங்களிலும், உணவகங்களிலும் இலக்கிய நூலை வைத்தும், ஜனங்கூட்டங்களை சென்றடையும்படிக்கு வேதாகம தபால்வழி பாடத்தினை பயன்படுத்தியும், நகரங்களிலும் சமுதாயத்திலும், பிரச்சாரம் செய்து நம்மோடு தனிப்பட்டவிதத்தில் வேதத்தைக் கற்று நம்முடைய

கூட்டங்களில் பங்குபெற ஜனங்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் இந்தப் பணியைச் செய்ய நாம் இவ்வாறு செல்கையில், எதிர்ப்புகளையும், உபத்திரவத்தையும் கூட நாம் சந்திப்போம், ஏனென்றால் பிசாசு போரிடுவான், ஆனால் இந்த எதிர்ப்புகூட முன்பு எப்போதுமில்லாதவாறு சுவிசேஷம் பரவுவதற்கு உதவியாயிருக்கும். இதே தான் முதல் நூற்றாண்டில் நடந்தேறியது, நாம் செய்யும்படி தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பணியை நோக்கி மாத்திரம் முன்னேறி சென்றால் இதே தான் இன்றும் நடந்தேறும்.

நாம் வெறுமனே உட்கார்ந்து கொண்டு, நம்முடைய ஊர் ஜனங்களுக்கும் உலகத்திற்கும் சத்தியத்தை எடுத்துச் செல்ல மறுக்கிறவர்களாயிருக்கும் போது, நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ பாதுகாப்பிலிருந்து மனிதவர்க்கத்தைப் பிடுங்கிக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். அதன் விளைவாக, அவர்கள் இழந்து போனவர்களாகவும், நாம் பரிதாபகரமாக கர்த்தரை இழந்து விடுவதால் நம்முடைய சொந்த ஆத்துமாவும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்.

சகோதரரே, உலகம் மரிக்கிற வேளையில் சபை வளர்ச்சியற்று சோம்பலாய் இருக்கட்டும் என்றும், போதும் போதும் என்றும் இனிமேலும் வெறுமனே உட்காராதிருக்க தீர்மானிப்போமா? நம்முடைய ஆவிக்குரிய மந்த நிலையினால் பிறருடன் பேசி உண்மையை வெளிப்படுத்த பயந்து வெட்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கு மாறாக மத உலகில் நாம் எப்போது எழுந்து வழிநடத்தும் குரலாக இருக்கப் போகிறோம்? நமது கர்த்தர் யூதாவின் **சிங்கம்** என புகழப்பட்டவர் அல்லவா! நாம் அவருடையவர்களானால், நாம் துணிச்சலான இருதயங்களைக் கொண்டிருக்க வேண்டும்!

நீங்கள் ஒரு வழிநடத்துனரா? முழங்காலில் நின்று தேவன் உங்களுக்கு உதவும்படி கேளுங்கள், மேலும் உங்களுடைய உடன் வழி நடத்துனர்களும் கர்த்தர் உங்களுக்கு முன் வைத்த திறந்த வாசலைக் காணட்டும். அதன் பின் "**அதன் உள்ளே செல்லுங்கள்**"! தொடர்ந்து செல்லுங்கள்!

"அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு ஏஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2).

# நாளை மீண்டும் முயலுவேன் இவ்வுலகை மேற்கொள்ள

# Tomorrow I`ll Grapple again with the world

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே;
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

நான் இந்த நல்வேளையை,
அநுபவிக்கட்டும்,
இந்த மலைகளையும், வானங்களையும்
நீரோடைகளையும்,
நீண்ட, நெடுநாளின் துதிகீதங்களை கவனிப்பேன் நான்
மற்றும் இன்னொரு உலகக் கனவுகளில் விழித்திருப்பேன்;
இறுக அணைத்துக்கொள்வேன் இந்நிமிடங்களை எனக்காக

-ஒவ்வொன்றாக எண்ணுவேன் அவைகளை-
பொக்கிஷமாக வைப்பேன்
அன்பு இருதயங்களின் மனமார்ந்த அன்பினை
வெது வெதுப்பான அஸ்தமிக்கும் சூரியனோடே;
நான் விண்மீன்களை சென்றடைவேன்
மாலை மயங்கும் ஆகாயத்துனுள்
அவைகளை மென்மேலும் இழுத்துகொள்வேன்
என் ஆன்மாவினுள்
வருங்காலத்தைப் பற்றியிருக்கும் எந்த
மந்தாரத்தையும் பிரகாசிப்பிக்க.

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே-
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

*-Betty Burton choate*

# அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்த ஸ்திரீ

## The Woman Who Had To Wait For A Long Time

*J.Glory Arjunan*



எலிசபெத் ஒரு யூத ஆசாரியனின் மனைவி அவளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பது நமக்கு மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன்.

**அவளுடைய குணம்:** அவளுடைய குணம் எப்படிப்பட்டதாய் இருந்தது? லூக்கா1:6-ல் அவள் தேவனுக்கு முன்பாக **நீதியுள்ளவளாயிருந்தாள்** என விவரிக்கப்பட்டுள்ளது. மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாக தங்களைக் காட்டுவதற்கு சிலர்மாய்மாலமான செயல்கள் செய்வர். மனிதர்களைப் பிரியப்படுத்த சிலர் வேஷம் போடுவர் வெளித்தோற்றத்தில் நீதியுள்ளவர்களைப் போல் தங்களை காண்பிப்பர். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள். அப்படியானால் மனிதர் பார்வையில் நீதியுள்ளவர் களாயிருப்பதோ? தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயி ருப்பதோ? எது எளிது? நம்மால் நீதியுள்ளவர்களாய் நடக்க முடியுமா? ரோமர்3:10..... "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்கிறது. பிலிப்பியர்3:8,9-ல் "...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத் தினால் வருகிற **சுயநீதியை** உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான **நீதியை** உடையவானாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு...." என பவுல் கூறுகிறான். அநேக ஸ்திரீகள் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறியாமல், மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமை, பொய் சொல்லமை, திருடாமை, உதவிசெய்தல், இரக்கஞ்செய்தல் போன்ற நற்கிரியைகளைச் செய்து சுயநீதியுடைவர்களாயிருக் கின்றனர். ஆனால் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வரும் நீதியைக் குறித்து

அறியாதவர்களாய், கிறிஸ்துவுக்குள் வராதவர்களாய் காலத்தைக் கழிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திகளும் கூட பழைய பாரம்பரியங்களில் நியாயப்பிரமாணத்தினால் வரும் சுயநீதிக்குக் கீழ்ப்பட்டு, கிறிஸ்துவின் கிருபைக்குக் கீழ்ப்படியாமலும், அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும் என்ற விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெறாமலும் இருக்கின்றனர். அன்பு சகோதரிகளே, நம்மை நாமே சோதித்துப்பார்ப்போம். உண்மையாகவே பவுல் கூறியதுபோல் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று ஒதுக்கிவிட்டு விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெற்று எலிசபெத்தைப்போல் தேவனுக்கு முன்பாக (மனுஷருக்கு முன்பாக அல்ல) நீதியுள்ளவர்களாய் இருப்போம்.

**அவளுடைய வீடு:** அது ஒரு அமைதியான வீடா? சமுதாயத்தின் பார்வையில் அவள் வீடு நிறைவுள்ளதாயிருந்ததா? குடும்பமென்றிருந்தால் அதில் ஒரு குழந்தையாவது இருக்கவேண்டுமென சமுதாயம் கூறுகிறதே! லூக்கா1:7-ல் அவள் மலடியென்றும், வயது சென்றவளாயிருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் எலிசபெத்தும் அவள் புருஷனும் குழந்தையில்லாமல் போனதினால் உண்டான ஏமாற்றத்தில் எப்படியிருந்திருப்பார்கள்? சமுதாயத்தின் ஏச்சு பேச்சுக்கெல்லாம் ஆளாயிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் என்ன செய்தார்கள்? லூக்கா1:13-ல் அவர்கள் தேவனை நோக்கி பல வருடங்களாக வேண்டுதல் செய்தார்கள் என தெளிவு படுத்துகிறது. எனவே தான் அவ்வசனத்தில் கர்த்தருடைய தூதன் "....சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்....." என்றான். பல வருடங்களாக பிள்ளையில்லாத குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் ஒரு குழந்தையை வாக்குப் பண்ணுகிறார். சாதாரணமாக, நாம் பல காரியங்களுக்காக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லையென்றால் ஜெபிப்பதை நிறுத்தி விடுவோம். ஆனால் இந்த தம்பதியாரோ வயது சென்ற போதும் வேண்டுதலை நிறுத்தவில்லை போலும். எனவே தான் கர்த்தருடைய தூதன் 'உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' என்றான். எலிசபெத் வயது சென்றவளாயிருந்த படியினால் தேவனால் அவர்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பது கூடாத காரியமாயிருந்ததா? இல்லை. "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (வச.27). இதுமாத்திரமல்ல "தேவனாலே

எல்லாம் கூடும்". நாம் செய்ய வேண்டியதென்ன? நாட்கள் கடந்தாலும், வருடங்கள் கடந்தாலும் நம் வேண்டுதலை தேவனுக்குத் தெரியப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

**அவளுடைய புருஷன்:** எலிசபெத்தின் புருஷனாகிய சகரியா எருசலேமில் தன் ஊழியத்தை நிறைவேற்றி ஊமையாகத் திரும்புகிறான் (லூக்.1:8-23). அன்பு சகோதரியே, இப்படிப்பட்ட நிலையில் தன் புருஷனை ஏற்றுக் கொள்ளவும் பேசமாட்டாத அவனுடன் கூடி வாழவும் எலிசபெத்திற்கு என்ன குணங்கள் தேவைப்பட்டிருக்கும்? தேவ பக்தியுள்ள, தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டிருந்த அவளுக்கு நிச்சயம் தேவனுடைய சித்தம் எதுவாயிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் குணம் தான் தேவைப்பட்டிருக்கும். சில சகோதரிகள் சந்தோஷமான சூழ்நிலையில் அதிகமான பக்தி வைராக்கியத்துடனிருப்பர். ஏதாவது கஷ்டமோ, துன்பமோ நேரிட்டால் அவர்களிடமிருந்த விசுவாசம் பறந்து போய்விடும். விசுவாசத்தை மட்டும் மறுதலிக்க மாட்டார்கள், தேவனையே தூஷிக்கவும்கூட செய்வர்கள். யோபுவின் மனைவி, யோபுவுக்கு நேரிட்ட பயங்கரமான சோதனையைப் பார்த்து: "....நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு2:9). அநேகர் கூட தங்களுடைய புருஷர்களுடைய உத்தம ஊழியத்தை நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிக்காமல், ஏமாற்றங்களும், துயரங்களும், துன்பங்களும் ஏற்படுகிற சமயத்தில் சலித்துக் கொண்டு, குடும்பத்தில் பிரச்சனை ஏற்படக் காரணமாகின்றனர். சகரியா ஒரு சிறந்த ஊழியன், ஊழியத்தை நிறைவேற்றி சரீரத்தில் ஒரு ஆசீர்வாதத்தை இழந்தவனாய் திரும்புகிறான். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்த படியினால் சந்தோஷத்துடன் கூடி வாழ்ந்தாள்.

**அவளுடைய விருந்தாள்:** இயேசுவின் தாயாகப் போகவிருந்த மரியாளிடத்தில் எலிசபெத் அதிக அன்புள்ளவளாயிருந்தாள். எனவே தான் நடக்கவிருக்கிற இரகசியத்தை அறிந்தவளாய், "....எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (லூக்.1:42,43) என்றாள். இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்று பயந்த மரியாளிடம் எப்பேர்பட்ட அன்பு காட்டியிருக்கிறாள் இந்த

எலிசபெத்! மரியாளை வாழ்த்தி உபசரித்ததிலிருந்து (லூக்.1:42-45) என்ன குணம் தெளிவாகிறது? அன்புக்குப் பொறமையில்லை, தற்பெருமையுமில்லை என்ற குணம் தெளிவாகிறது. ஆம், எலிசபெத்தோ, வயது முதிர்ந்த ஒரு ஊழியக்காரி, தேவனுடைய சகல நியமங்களையும் கைக்கொண்டு நடந்தவள், தன்னைக்காட்டிலும் வயதில் குறைந்தவள் மரியாள், தன்னிலும் மேன்மையுள்ளவள், ஆண்டவருடைய தாய் என பரிசுத்த ஆவியினால் அறிந்து அவளைப் புகழ்ந்தாள். இது மற்றவர்களின் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாத குணமல்லவா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்குமானால் நாமும் எலிசபெத்தைப் போல் காணப்படுவோம். எலிசபெத்திடமிருந்த இந்த நற்குணம் இல்லையென்றால் நிச்சயமாகவே நமக்குள் கிறிஸ்துவின் ஆவி இல்லை என்று தான் அர்த்தம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல".

**அவளுடைய மகன்:**எலிசபெத் பல வருடங்களாகக் காத்திருந்து, தேவசித்தம் செய்தபடியினால் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவனிலும் யோவான்ஸ்நானகனைப் போல் ஒரு தீர்க்கதரிசி இல்லை என்றும், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும மேன்மையுள்ளவன் என்று இயேசுவே சாட்சி பகர்ந்த மகனை பெற்றெடுத்தாள். யோவான் ஸ்நானகனைக் குறித்து பல காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டன. விருத்தசேதனம் பண்ணின நாளில் லூக்.1:60 "....அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள்". அவளுடைய இந்த காரியம் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? இந்த பெயரை தேவதூதன் சகரியாவிடம் முன்னறிவித்திருந்தான். சகரியவோ தாம் ஊமையாயிருந்த போதும் தன் மனைவியிடம் இதைக்குறித்து ஏதோ ஒரு வழியில் தெரிவித்திருக்கவேண்டும். எனவே தான் தன் புருஷனோடு கூட தானும் தேவசித்தம் செய்ய வேண்டும், தேவதூதனால் அறிவிக்கப்பட்ட நாமம் தரிக்க வேண்டுமென தேவசித்தம் செய்வதில் கவனமாயிருந்தாள் எனத் தெரிகிறது. அத்தோடு கூட ஒரு பக்தியுள்ள தாயாகவும் அவளிருந்திருக்கிறாள். ஆனபடியால் கர்த்தருடைய கரம் தன் தாய் தந்தையாரிடம் இருந்ததுபோல யோவானிடமும் இருந்தது.

அன்பு சகோதரியே, நம் வேண்டுதல்களை கர்த்தருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமல்ல, கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும், நியமங்களின்படியும் தேவனுக்கு முன்பாக விசுவாசத்தினால் வரும் **நீதி**யை பெறும்படிக்கும் வேண்டுதல்கள் கேட்கப்படும் படிக்கும் காத்திருக்கவேண்டும். எலிசபெத்தின் இந்த நல்மாதிரியை நாமும் பின்பற்ற தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

### இவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

*1.ஜோசப்ப்ரவின்*
*2. மரிப்ரசன்னா*
*3. அனிஷர்மிளா*
*17.7.05 அன்று சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்*
*ஊழியர் சகோ. சாலொமோன்*
*பாண்டிச்சேரி*

## ஜீவ வழி

*பகிர்ந்திடும் வாழ்வே ஜீவ வழி!*
*பரிசுத்தர் வாழ்வின் தூய வழி!*
*வருவோம் இணைவோம்*
*பகிர்ந்திடுவோம்!*
*வாழ்வின் மேன்மையை*
*அறிந்திடுவோம்!*

*-A . ராபர்ட் கிளைவ்*

## பேசும் வேதாகமம்

1. ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் எதிலே தள்ளப்பட்டான்? - அக்கினிக்கடலிலே - வெளி.20:15.
2. தீமைசெய்கிறவன் யாரைக் காணவில்லை? - தேவனை - 3யோவா.11.
3. உலகமுழுவதும் எவனுக்குள் கிடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்? - பொல்லாங்கனுக்குள் - 1யோவா.5:19.
4. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் என்ன செய்யவேண்டியது? - முந்தி அறியவேண்டியது - 2பேது.1:20.
5. பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ என்ன அளிக்கிறார்? - கிருபை - 1பேது.5:5.
6. உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் யாருக்குப் பகைஞனாகிறான்? - தேவனுக்கு - யாக்.4:4.
7. நீதிமான் எதினாலே பிழைப்பான்? - விசுவாசத்தினாலே - எபி.10:38.
8. கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் எதைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது? - அநியாயத்தை - 2தீமோ.2:19.
9. விசுவாசத்தின் இரகசியத்தை எப்படிப்பட்ட மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்? - சுத்த மனச்சாட்சியிலே - 1தீமோ.3:9.
10. உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது யாருக்கு நீதியாயிருக்கிறது? - தேவனுக்கு - 2தெச.1:6.

# வேதாகம ஆலோசனை

**“இவைகள் பேதைகளுக்கு வினாவையும்,
வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.
புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்;
விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும்,
அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும்,
அவர்கள் உரைத்த புதை பொருள்களையும்
அறிந்துகொள்வான்”(நீதி.1:4-6)**

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-1**

**6.வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதா?**

இக்கேள்விக்கான சரியான பதிலை நாம் வேதாகமத்தின் துணை கொண்டு அறியலாம். “வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப்பேசினார்கள்” (2பேது.1:20,21). ஆம், எந்தத் தீர்க்கதரிசனமும் அப்படியே பொருள்தராது அப்படியே ஒருவர் எடுத்துக்கொள்வாரானால் அவர் பிசாசின் உபதேசத்திற்கு செவிகொடுத்துப் போய்விட வாய்பு உள்ளது. ஏனென்றால் வேதாகமம் மனுஷனுடைய என்னத்தினால் உண்டான ஒன்றல்ல. இது தேவனுடைய திட்டம். தேவன் தம்முடைய வார்த்தைகளை அவருடைய பரிசுத்தவான்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் உதவியோடுகூட அருளிச்செய்தார்.


“அவர் அவர்களை நோக்கி: நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று கற்பித்தார். அதற்கு அவர்கள்: நம்மிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக் கொண்டார்கள். இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன? இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் அடிமையாயிருக்கிறதா? உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா?....... அப்படியானால் நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்?” (மாற்.8:15-21). இயேசுவோடு இருந்த சீஷர்களும் சில வேளைகளில் அவருடைய வார்த்தையை அப்படியே எடுத்துக்கொண்டு தவராக புரிந்து கொண்டனர். இவர்களைப் போல தீர்க்கதரிசன வசனங்களை அப்படி எடுத்து அர்த்தம் கொள்ளவோமானால் தவறாகிவிடும்.

# பொது அறிவுச் சோதனை

1. நதியில் நீரின் ஓட்டத்தை கணக்கிடும் அளவுகோல் எது?
   அ)காஸெக் ஆ)ஸ்ர்க்ஸ் இ)க்யூசெக்
2. இந்தியாவின் வர்த்தக தலைநகரம் என்று அழைக்கப்படுவது எது?
   அ)சென்னை ஆ)மும்பை இ)கொல்கத்தா
3. மனித உடலில் உள்ள மிகச் சிறிய சுரப்பி எது?
   அ)தைராய்டு ஆ)அட்ரினல் இ)பங்கிரியாஸ்
4. நமது அரசியலமைப்பு சட்டம் எத்தகையது?
   அ)நிலையானது ஆ)நெகிழ்ந்து கொடுக்கக் கூடியது இ)நடைமுறைக்கு ஒவ்வாதது
5. நீரில் கரையும் வைட்டமின் எது?
   அ)வைட்டமின் -ஏ ஆ)வைட்டமின் -கே இ)வைட்டமின் -பி

விடைகள்: 1.க்யூசெக் 2.மும்பை 3.தைராய்டு 4.நெகிழ்ந்து கொடுக்கக்கூடியது 5.வைட்டமின் -பி.


நீங்கள் பாரண்டிச்சேரியில் இருந்தால் பாரண்டியில் உள்ள சபையில் கலந்து கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியுங்கள்



உங்களை அன்புடன் வரவேற்கும் சபை ஊழியர் மற்றும் சபையார்கள்.

G.சாலொமோன், கிறிஸ்துவின் ஊழியர்

**கிறிஸ்துவின் சபை**

கொலம்பஸ் கிப்ட்சாப் மேல்மாடி
வில்லியனூர் ரோடு
ரெட்டியார் பாளையம்
பாண்டிச்சேரி -10
இந்தியா.


## ஜெபியுங்கள்

பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் நடைபெற்ற 19வது கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக நன்றி கூறி....

# சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 35

D.எபிநேசர்

**தாவீது:** நீ கடந்த முறை குறிப்பிட்ட மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற வசனம் யோவேல்2:28-ல் இருக்கிறது வேதத்தைப் பகுத்துப் படிக்காதவர்கள் தான் இந்த வசனத்தைப் போட்டு மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது (2தீமோ2:15) சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கும்படி வலியுறுத்துகிறார்.

**யோனத்தான்:** பகுத்துப் படிக்கறதுன்னா என்ன?

**தாவீது:** பகுத்துப் படிக்கறது அட்டபடீன்னா, எங்கே? எப்போது? யாருக்குச் சொல்லப்பட்டது என்பதை அறிந்து படிக்கணும். சில கட்டளைகள் தனிப்பட்ட மனிதருக்கு சொல்லப்பட்டிருக்கலாம். ஆதி12:1 சில குறிப்பிட்ட பிரிவினருக்கு சொல்லப்பட்டிருக்கலாம். எரே.10:1 சில எல்லோருக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கலாம். அப்.17:30 நமக்கு எதுங்கறத பார்க்கணும்.

**யோனத்தான்:** ஒருவேளை அப்படிப் பகுத்துப் படிக்கலேனா என்னாகும்?

**தாவீது:** என்னாகும்! மதுரை பஸ்டான்டுல மக்கள் அலையுற மாதிரி குழம்பிக்கிட்டே அலைய வேண்டியதுதான்.

**யோனத்தான்:** அடப்போப்பா! அது பெரிய சிரமமப்பா!

**தாவீது:** அதுக்காக நாம போக வேண்டிய ஊருக்குப் போகாம இருக்க முடியுமா? முதலில் நாம போற ஊருக்கு எந்த பஸ்டான்டுனு தெரிஞ்சு அந்த இடத்துக்குப் போகணும். அங்க போனா நூறு பஸ் நிக்கும்! அதுல நம்ம ஊரு பஸ் எதுனு கண்டு பிடிக்கணும். அது நேர்வழியா போகுதா? எது மொதல்ல போகுதுங்கறதையெல்லாம் பார்க்கணும். இத்தனையும் பார்த்து ஏறி உட்கார்ந்தாத்தான் நாம போக வேண்டிய ஊருக்கு பத்திரமா போய்ச் சேர முடியும்.

**யோனத்தான்:** நமக்குத் தெரியலேனா மத்தவங்களக் கேட்டுப் போற மாதிரி, பைபிள் படிச்ச பெரிய

ஊழியக்காரங்ககிட்டேத்தானே கேட்குறோம். அவங்களே இப்படி மாத்தி விட்டுறாங்களே!

**தாவீது:** அதுதானே நமக்கு வருத்தமாக இருக்கு! இவங்க சொல்றத வேத வாக்கா எடுத்துக்கற மக்களை நினைச்சா அதைவிட வருத்தமா இருக்கு மத்.23:13.

**யோனத்தான்:** சரிப்பா மேட்டருக்கு வா. "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்கிற வசனம் நிறைவேறிவிட்டதா அல்லது இப்போதும் ஊற்றப்படுகிறதா அதைச் சொல்லு.

**தாவீது:** அது நிறைவேறிவிட்டதான்னு தெரிஞ்சுக்கறதுக்கு முன்னாடி இப்போது நமது நேரம் நிறைவாகி விட்டதைத் தெரிஞ்சுக்கணும். அதனால கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த சந்திப்பில் நாம் அது பற்றி பேசுவோம்.

Bye. *(மீண்டும் சந்திப்போம்)*

## வேத அறிவுப்போட்டி எண் 59 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| Mrs. ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ் | -மதுரை | R.ராமதாஸ் | -சென்னை |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | S.ஜெயராணி | -சிலுவத்தூர் |
| P.டேவிட் | -புதுக்கோட்டை | N.கமலவேணி | -சென்னை |
| S.சாம்பிச்சை | -மதுரை | K.கந்தசாமி | -கீரனூர் |
| Mrs.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் |
| V.S.சர்லோ | -பாண்டி | A.ராபர்கிளைவ் | -சிலுவத்தூர் |
| G.P.ஏசையன் ராஜ் | -கோபி | P.அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| D.ஏசுதாஸ் | -சித்தூர்(ஹ.ஞ) | S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| Sis.குளோரி பௌல்ஜர் | -சென்னை | J.J.சகாயமேரி | -புதுக்கோட்டை |

## வேத அறிவுப்போட்டி எண் 59 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. நட்சத்திரங்களும் | -யோபு25:5 | 6. கர்த்தரைக் | -2கொரி.10:17 |
| 2. மெலித்தா | -அப்.28:10 | 7. யாக்கோபு, ஏசா | -ஆதி.33:10 |
| 3.எமோரியரை | -யோசு.10:11 | 8. ஆச்சரியமானவர், மகத்துவமானவர் | -ஏசா.28:29 |
| 4. விசுவாசத்தினாலாகும் | -ரோம9:30 | 9. சுட்டெரிக்கப்படுவதே | -எபி.6:8 |
| 5. வெறுக்கிறார் | -உபா.16:22 | 10. முதல்வராயிருக்கும்படி | -கொலோ.1:18 |

வாலிபர் பகுதி

# இச்சையடக்கம்

P.Balakrishnan



கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான வாலிப சகோதர, சகோதரிகளுக்கு வானம் விட்டு இவ்வையகம் வந்த நமது மீட்பரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதிலே மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த நாட்களிலும் நேரங்களிலும் பல போராட்டங்களை சந்தித்து கடந்து வருகிறோம் என்பதை நாம் உணர்கிறோம்.

அன்பு வாலிப சகோதர சகோதரிகளே நம்முடைய வாழ்வில் தேவன் முதலில் ஒன்றை எதிர்பார்க்கிறார். நமது தேவன் மட்டுமல்ல இவ்வுலகத்தில் உள்ள அனைவருமே அதை விரும்புகிறார்கள். எதுவென்று நினைக்கிறீர்கள்? "அடக்கம்" தான். தேவன் படைத்த மண்ணான மனிதனுக்கு தன்னை அடக்கி ஆளும் தன்மை வேண்டும் என்று கூறுகிறார். கண்போன போக்கில் போய்விடக் கூடாது என்பது உலக நியதி. மனம்போல் வாழ்வு என்று நினைத்து வாழ்ந்து விடவும் கூடாது. நாம் நமது பெற்றோருக்கும், உலகத்திற்கும் அடங்கி நடந்தால் மட்டும் போதாது. தேவனுக்கு பயந்து 'இச்சையடக்கத்தோடு' நடக்க வேண்டும். நாம் பள்ளியில் பயிலும் உலக பாட புத்தகத்தில் தமிழ் புலவர் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரி இருள் உய்த்து விடும்" என்று நாம் சிறு வயதில் பள்ளியில் பயிலும் போது படித்திருப்போம் இது சரீரப் பிரகாரமான அடக்கமாயிருக்கிறது. நமக்கு ஜீவன் தந்த தேவன் எந்த விதமான அடக்கத்தை விரும்புகிறார் என்று பார்ப்போம்.

எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே, நம்முடைய வாலிப பருவத்தில் இச்சையடக்கமாயிருக்க வேண்டும்.

இச்சையடக்கமாயிராவிட்டால் இறந்து விடுவோம் என்று தேவ தாசனாகிய யாக்கோபு தேவனுடைய வார்த்தையை நமக்கு போதிக்கிறார். அது என்ன வென்றால் "இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் (யாக்.1:15). ஆகையால் நாம் இச்சையடக்கத்தோடு நடக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஏனென்றால் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் இச்சையடக்கமாயிராமல், தேவனுடைய கட்டளையை மனதில் வைக்காமல் தங்களுடைய சுய இஷ்டப்படி நடந்ததினால் எப்படிப்பட்ட சாபத்தைப் பெற்றுக் கொண்டார்கள்! (ஆதி.3:1-17). இந்த வாலிபபிராயம் கண்களில் காண்கின்ற யாவற்றையும் அடைய வேண்டும் என்று சரீரபிரகார மான எண்ணங்களை நாடிப்போக தூண்டும். நமக்கு தேவன் போதித்த கட்டளைகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். வாழ்க்கை என்பது வேடிக்கை பொருளல்ல. அப்படி வேடிக்கையை வாழ்க்கையாக பயன்படுத்தினால் வேதனைகள் உங்களை வாடிப்போகப் பண்ணிவிடும். தேவன் அன்பான கட்டளைகளை நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் பிறருக்கு எடுத்துக்காட்டாக அடக்கமுள்ள நல்ல வாலிப சகோதர சகோதரிகளாக வாழ வேண்டும். நம்முடைய அடக்கத்தைக் கண்டு பின்வரும் சந்ததியாரும் அவ்விதமே நடப்பார்கள்.

தேவன் படைத்த அனைத்துமே தேவனுக்கு அடங்கி நடக்கிறது. மண்ணான மனுஷனோ! இச்சைக்குக் கீழ்ப்படிகிறான். இச்சையடக்கத்தோடே நடக்கவேண்டும் என்று போதிக்கப் படும்போது அதை ஏற்க மனதில்லாதவர்களாய் அவ்விடத்தை விட்டு விலகி ஓடிவிடுவார்கள். இப்படித்தான் ஒரு நாள் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் மார்க்கத்தை அறிந்த பேலிக்ஸூஉடன் இச்சையடக் கத்தைப் பற்றி பேசும் போது, எனக்கு சமயம் வரும்போது அழைக்கின்றேன் என்று சாக்கு போக்கு சொல்லி விட்டு தப்பிச் செல்வதை (அப்.24:25) வாசிக்கின்றோம். இந்த பேலிக்ஸ் போல் உலகத்தில் உள்ளவைகள் மேல் இச்சைவைத்து வாழ்ந்தோமானால் தேவனுக்கு விரோதமாயிருப்பவர்களாயிருப்போம். ஏனென்றால் தேவ வழியை தெரிந்த எந்த ஒரு சகோதர சகோதரியும் மாம்ச இச்சைக்கு விரோதமாக போராடி அடக்கத்தை கைக்கொண்டு

நடப்பார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதும்போது, "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள் அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படி அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படி அப்படிச் செய்கிறோம்" *(1கொரி.9:25)*, மேலும் கலாத்தியருக்கு எழுதும் போது, "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கிறது...." *(கலா.6:19-23)*என்று எழுதினான்.

நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் இச்சைக்கு அடிபணிந்தோர் அநேகர். சபையின் மூப்பர்கள் இச்சையடக்கம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று தீமோத்தேயுவுக்கு பவுல் *(1தீமோ.3:3)* எழுதுகிறான். பேதுரு கூறும்போது ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் கூட்டுங்கள் *(2பேது.1:6)* என்கிறான். வேதத்தில் அடக்க மில்லாதவர்களைப் பற்றியும், கீழ்ப்படியாதவர்களைப் பற்றியும் படிக்கின்றோம். லோத்தின் மனைவி தேவதூதர்களால் எச்சரிக்கப்பட்டும் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் நடந்ததினால் பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் *(ஆதி.19:15-26)*. ஆகையால் "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொள்ளுங்கள் *(ரோம.13:14)*.

எனக்கு அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, நாம் இச்சையடக்கத்தோடே நடந்து பேரின்பமிக்க தேவனுடைய அன்பு பிள்ளைகளாக மாறி சரீர வாழ்விலும் ஆவிக்குரிய வாழ்விலும் இச்சையடக்கத்தோடே வாழ்ந்து, வருங்கால சந்ததியாருக்கு மாதிரியை விட்டுச்செல்வோம். தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

## சகோதரியின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்


நமது இதழின் வாசகர் J.S. நிர்மலாஜான் அவர்களது தாயார் J.S. மனோரஞ்சிதம் அவர்கள் 16.7.05 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள்.

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" *சங்.116:15*

சிறுவர் பகுதி

# நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்

வேத பகுதி:யோவான்13:21-30



ஒரு முறை இயேசு பன்னிரண்டு சீஷர்களோடு இருக்கும்போது அவர் ஆவியில் கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்றார். அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த யோவான் அருடைய மார்பிலே சாய்ந்து கொண்டு ஆண்டவரே அவன் யார் என்று கேட்டான். இப்படி கேட்கும்படியாக சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான்.

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன் தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அதை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுதுதான் இயேசு அவனை நோக்கி நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.

ஏன் அவனைப் பார்த்து இப்படி சொன்னார் என்று தெரியுமா? அவன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான், பிசாசானவனும் அவன் இருதயத்தைத் தூண்டியிருந்தான். தான் பூமிக்கு வந்த நோக்கம் நிறைவேறத்தக்கதாகவும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரத்தில் சம்பவிக்கதக்கதாகவும் அவர் அவனைப் பார்த்து நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்று சொன்னார். இவ்வசனத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு எதையும் சீக்கிரமாய்ச் செய்து விடாதீர்கள்.

**மனப்பாட வசனம்**

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது" (யோவான்6:40).

# வேத அறிவுப் போட்டி எண்.60

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25-தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. தேவன் அவனுக்குச் சுகவாழ்வைக் கட்டளையிட்டால், அதின்மேல் உறுதியாய் நம்பிக்கை வைக்கிறான்; ஆனாலும் அவருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களின் வழிகளுக்கு எப்படியிருக்கிறது?
2. நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்று யார் யாரை நோக்கிச் சொல்வது?
3. துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக் கொடுத்து விட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் என்னாவான்?
4. பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று என்று எழுதுவது யார்?
5. பூமியின் ராஜாக்களுக்கு அவர் எப்படிப்பட்டவர்?
6. எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே யார் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறது?
7. தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்களுடைய எதைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
8. உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி அவர்களுக்கு என்ன செய்யாதிருங்கள்?
9. அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் எப்படியிருக்கும்?
10. அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக என்ன செய்யக்கடவன்?

## நடப்புச் செய்திகள்

- 50 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மீண்டும் 'டாக்டர்' பட்டம் வழங்கி கவுரவித்தது.
- தமிழ் மொழி மேம்பாட்டுக்காக தனி வாரியத்தை மத்திய அரசு அமைக்கிறது.
- உலக வெப்பம் அதிகரிப்பதை தடுக்க நடவடிக்கை தேவை என்பதை ஜி.8 நாடுகள் ஒப்புக்கொண்டன.
- கொடைக்கானல் பன்பலை வானொலியில் மாலை நேர ஒலிபரப்பு விரைவில் தொடங்கும்.
- இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னணி பேட்ஸ்மேன் கிரகாம்தோர்பே குடும்ப வாழ்க்கைக்கு அதிக நேரம் ஒதுக்குவதற்காக ஓய்வு.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**


Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th August 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்**

## கிறிஸ்துவின் சபை

**17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்




**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5, BATLAGUNDU - 624 202
S.INDIA

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா –ரூ.50/–
வெளிநாடு – ரூ.500/–
தனிப் பிரதி – ரூ.5/–

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India